**செய்தி வெளியீடு எண்: 315** **நாள்: 04.06.2019**

**சென்னை சமூகப் பாதுகாப்புத் துறையின் மூலம் மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கத்தில் கீழ்கண்ட பதவிகள் ஒப்பந்த அடிப்படையில் (முற்றிலும் தற்காலிக பணியிடம்) நிரப்பப்பட உள்ளதால், அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**தொகுப்பூதியம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ள காலிப்பணியிடங்களின் விவரம்:**

**மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம்**

1. திட்ட அலுவலர் (Programme Officer) – 1 பணியிடம் (தொகுப்பூதியம் ரூ.26, 250/– ஒரு மாதத்திற்கு).
2. உதவியாளர் மற்றும் கணினி இயக்குபவர் (Assistant cum Data Entry Operator) – 1 பணியிடம் (தொகுப்பூதியம் ரூ, 10,000/– ஒரு மாதத்திற்கு)

**<u>கல்வித் தகுதி, அனுபவம் மற்றும் வயது:</u>**

**1. திட்ட அலுவலர் (Programme Officer) (1 பணியிடம்)**

**அடிப்படை கல்வி தகுதி –**பட்டதாரி/முதுநிலை பட்டதாரி (10+2+3 முறையில் கல்வி பயின்றவர்கள்)

**முன்னுரிமை**–குற்றவியல் / கல்வியியல் / குழந்தை வளர்ச்சி / உளவியல் / சமூகப்பணி / சமூகவியல்களில் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**பணி அனுபவம் –**தொழிலாளர் நலன், கல்வி, சமூகநலம், குழந்தை நலம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் மூன்று வருடம் பணிபுரிந்த அனுபவம் வேண்டும்.

**வயது வரம்பு :** 40 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**<u>ஓய்வு பெற்றவர்கள்</u>**

கள அளவில் புதிய திட்டங்களை வகுப்பதில் பங்குபெற்ற அரசிதழ் பதிவுப்பெற்ற அலுவலர் நிலையில் பணிபுரிந்த அனுபவம் மிக்க ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் விண்ணப்பிக்கலாம்.
**(வயது வரம்பு : 62 வயதிற்கு மிகாமல்.)**

**1. உதவியாளர் மற்றும் கணினி இயக்குபவர் (Assistant cum Data Entry Operator) (1 பணியிடம்)**

**அடிப்படை கல்வி தகுதி –** பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் கணினி கல்வியில் பட்டயப் பயிற்சி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**பணி அனுபவம் –** கணினி இயக்குவதில் ஒரு வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**வயது வரம்பு :**40 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உரிய விண்ணப்பங்கள் http://www.tn.gov.in/department/30 அல்லது http://www.tn.gov.in/job_opportunity அல்லது http://www.socialdefence.tn.gov.in/ ஆகிய அதிகாரப்பூர்வ இணையதளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

மேற்கண்ட பதவிகளுக்கான தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் **21.06.2019** மாலை **5.30** மணிக்குள் கீழ்கண்ட முகவரியில் வந்து சேரும் வகையில் அனுப்பப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட தேதிக்குப் பின்வரும் விண்ணப்பங்களும் மற்றும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் தகவலின்றி நிராகரிக்கப்படும்.

இயக்குநர் / செயலாளர்,
மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம்,
சமூகப் பாதுகாப்புத்துறை,
எண். **300**, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
கெல்லிஸ், சென்னை–**10.**
தொலைபேசி : **044–26421358.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

.